குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.56/2020

அ.சா.5

2024–ம் ஆண்டு நவம்பர் 18–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 05–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | இஸ்மாயில் | ஜாதி | |
| தந்தை பெயர் | அப்பாஸ் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.23 மணி,

Accused Nayagan Present. Advocate Mr.Sabarinathan present for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

**1.** நான் ஓமலூர் மசூதி காம்ப்ளக்ஸில் குடியிருந்து, தக்காளி வியாபாரம் செய்து வருகிறேன். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு, மேட்டூர் சாலையில் சிவா காபிபார் முன்பு உள்ள புளியமரத்தின் அடியில் நான் தக்காளி வியாபாரம் செய்து கொண்டிருந்து போது, போலிசார் வந்து என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் போட்டேன். எதற்காக கையெழுத்து போட்டேன் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது கையெழுத்துக்கள் என்னுடையது. ( **அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.5 ஆகவும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.) போலிசார் விசாரிக்கவில்லை.

**( அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

2. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 05.12.2019 ம் தேதி காலை 07.00 மணியளவில் நான் வேலை செய்த காபி பார் அருகே நடந்த அ.சா.1 னின் கழுத்தில் இருந்து ஆஜர் எதிரி 3 பவுன் தங்க நகையை திருடி சென்ற சத்தம் கேட்டு நான் போய் பார்த்ததாகவும் அதன்பின்பு அன்றைய தினம் 16.30 மணியளவில் ஓமலூர் பிருந்தாவன் தியேட்டர் அருகே ஆஜர் எதிரியை போலீசார் விசாரித்த போது ஆஜர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் போலீசார் பதிவு செய்த போது நான் சாட்சியாக உடனிருந்து சாட்சி கையெழுத்து போட்டுவிட்டு அதை தொடர்ந்து ஆஜர் எதிரி எடுத்து ஆஜர் செய்த சுமார் 2 1/2 பவுன் எடைக் கொண்ட தங்க தாலி செயின், சுமார் 1/2 பவுன் எடைக் கொண்ட தங்க தாலி ஆகியவற்றை போலீசார் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றிய போது சாட்சியாக உடனிருந்து சாட்சி கையெழுத்து போட்டுவிட்டு மேற்கண்ட சங்கதிகளை விசாரணையின் போது கூறிவிட்டு தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை**

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 12.31 மணி,

ஒம்/--ச.ஷர்மிளா.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.